Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.5 (LW.8)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகையன் | ஜாதி | : | |
| த/பெ | : | வெள்ளைச்சாமி | தொழில் | : | (ஓய்வு) வனவர், கன்னிவாடி வனச்சரகம் |
| கிராமம் | : | திருப்பரங்குன்றம் | சமயம் | : | |
| தாலுகா | : | திருப்பரங்குன்றம் | வயது | : | 71/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2026.

( 2, 3, 4, 7 எதிரிகள் ஆஜர் . 1, 5, 9, 10, 11 மற்றும் 14 எதிரிகள் ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது. 6, 8, 12, 13 எதிரிகள் இறந்துவிட்டனர்.)

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு வனத்துறையில் வனவராக வேலை பார்த்து ஓய்வு பெற்று, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 27.02.2004 ஆம் தேதி கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு கட்டுப்பட்ட செம்பட்டி பிரிவு பெரியூர் பீட்டில் வனக்காப்பளாராக வேலை பார்த்தபோது, எங்களது செம்பட்டி பிரிவு வனவர் மகேந்திரன் என்பவர் அன்றையதினம் சுமார் 04.00 மணியளவில் செம்பட்டி வனப்பிரிவிற்கு வரச்சொல்லி நானும், வனக்காவலர் சாமியப்பன், மகேந்திரன், வனக்காப்பளர் ராஜாராம், வனக்காப்பாளர் ஞான பாலமுருகன் ஆகியோர்கள் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு வந்தோம்.

அப்போது அங்கிருந்த கன்னிவாடி வனச்சரக அலுவலர் தோணிமலை பகுதியில் ராஜசேகரன் காட்டில் தோதகத்தி மரங்களை சில நபர்கள் வெட்டிக்கொண்டிருப்பதாகவும், அந்த நபர்களை பிடித்து வரச்சொன்னார். வனவர் பிச்சை, வனக்காப்பளர் ஞானபாலமுருகன், வனக்காப்பளர் ராஜாராம், வனக்காப்பளர் சேர்வராயன், வனக்காவலர் சாமிக்கண்ணு ஆகியோருடன் நானும் சேர்ந்து அன்றையதினம் சுமார் 05.00 மணியளவில் தோணிமலை பகுதியில் ராஜசேகரன் காட்டிற்கு சென்று பார்த்தபோது, 7 நபர்கள் தோதகத்தி மரங்களை வெட்டிக்கொண்டிருந்தார்கள். அந்த 7 நபர்களை நாங்கள் பிடித்தோம். அப்போது அவர்கள் வெட்ட பயன்படுத்திய 2 ரம்பங்கள், 2 கோடாரிகள், ஒரு அரிவாள் ஆகியவற்றை கைப்பற்றினோம். அப்போது அவர்கள் வெட்டிய 28 தோதகத்தி கட்டைகள், 2 உருட்டு கட்டைகள் ஆகியவற்றை கைப்பற்றி வனவர் பிச்சை ஸ்தலமகசர் தயார் செய்தார். அந்த ஸ்தலமகசரில் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஸ்தலமகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துகளில் என்னுடைய கையெழுத்து முருகையா என்று கையெழுத்து செய்துள்ளேன். அந்த ஸ்தலமகசரில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.19/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி கைப்பற்றிய தோதகத்தி மரங்களை அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்து, அவரிடம் ஒப்படைத்ததற்கான கடிதம் பெற்றோம். அதே இடத்தில் வைத்து எதிரிகளில் ஒரவரான ராஜேந்திரன் என்பவரை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **(அ.சா.ஆ.20/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் அனைவரையும் அழைத்துக்கொண்டு கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு வந்துவிட்டோம். அன்றையதினம் இரவு எதிரிகளை

எங்களது கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் வைத்துவிட்டு, மறுநாள் காலையில் நீதிமன்றத்தில் ஒப்படைத்தோம்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களுக்கு தகவல் கிடைத்தபோது நீங்கள் எங்கு இருந்தீர்கள் என்றால் செம்பட்டியில் வனவருடன் இருந்தேன். உங்களுக்கு யார் தகவல் சொன்னார் என்றால் வனவர் தான் தகவல் சொன்னார். தகவல் கிடைத்த போது மணி எத்தனை என்றால் 03.00 மணி இருக்கும். செம்பட்டியில் இருந்து கன்னிவாடிக்கு யார், யார் சென்றீர்கள் என்றால் நானும், வனவரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். உங்களுக்கு தகவல் கிடைத்தபோது சாமியப்பன், மகேந்திரன், ராஜாரம், ஞானபாலமுருகன் ஆகியோர் எங்கு இருந்தார்கள் என்றால் அலுவகத்தில் இருந்தார்கள். சம்பவ இடத்திற்கு யார் முதலில் சென்றது என்றால் நாங்கள் அனைவரும் ஒன்றாக தான் சென்றோம், யாரும் தனிப்பட்ட முறையில் செல்லவில்லை.

சம்பவ இடத்திற்கு மொத்தம் எத்தனை நபர்கள் சென்றீர்கள் என்றால் நியாபகமில்லை. யார் யார் எந்த எந்த வாகனத்தில் சென்றீர்கள் என்றால் நாங்கள் அனைவரும் ஒரே வேனில் சென்றோம். நீங்கள் சென்ற வேன் நிறுத்தி வைத்திருந்த இடத்திற்கும், மரம் வெட்டப்பட்டதாக சொல்லும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 1 1/2 மணி நேரத்தில் நடக்கலாம். நீங்கள் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றால் 2 மணி நேரம் இருந்தேன்.

மலை பிரேதேசம் என்பதால் மாலை 05.00 மணிக்கு மேல் இருட்டாக தான் இருக்கும் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எங்கு

பெறப்பட்டது என்றால் சம்பவ இடத்திலேயே பெறப்பட்டது. ஸ்தல மகசரில் நான்கு மால் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நியாபகமில்லை. பொதுவாக ஸ்தல மகசர் தயாரிக்கும் போது சம்பவ இடத்தை குறிப்பதற்கு நான்குமால்கள் குறிப்பிடப்பட வேண்டும் என்றால் சரிதான். ஆனால் ஸ்தல மகசரில் நான்கு மால் குறிப்பிட்டிருக்கிறதா என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

எதிரிகள் சம்பவ இடத்திற்கு எவ்வாறு வந்தார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து நீங்கள் கையொப்பம் செய்யவில்லை என்றும், அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உங்கள் அலுவகத்தில் வைத்து தயார் செய்த பேப்பரில் கையொப்பம் செய்தீர்கள் என்றால் சரிதான். மரங்கள் எந்த தேதியில் வெட்டப்பட்டது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அவ்வாறு மரங்கள் வெட்டப்பட்டியிருந்தால் மரங்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி, அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால் உயர் அதிகாரிகளுக்கு தான் அதை பற்றி தெரியும். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2, 3, 4, 5 , 7, 9, 10, 11, 14 ஆகிய எதிரிகள் 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கூறியுள்ளனர்.**

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor